2016 ஜனவரி 21] [பேரவைத் தலைவர்]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் 1991 முதல் 1996 வரை தாராபுரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1993 முதல் 1996 வரை அமைச்சராகவும் பணியாற்றினார்கள்.

திரு. கே.என். சண்முகம் அவர்கள் 1977 முதல் 1980 வரை லால்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றினார்கள்.

முற்பகல் 10—05

திரு. பம்மல் நல்லதம்பி அவர்கள் 1980 முதல் 1984 வரை தாம்பரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நன்கு பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) பெருமழை மற்றும் வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட உயிரிழப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானங்கள் 2015 ஆம் ஆண்டு பெருமழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் உயிரிழந்தவர்கள் குறித்த தீர்மானம்.

"தமிழ்நாட்டில் கடந்த டிசம்பர் மாதம் எப்போதும் இல்லாத வகையில், வடகிழக்குப் பருவமழை, ஒரு சில நாட்களில் மிக அதிகமான அளவு கனமழையாகப் பெய்ததன் காரணமாக, தமிழ்நாட்டின் பல மாவட்டங்கள், அதிலும் குறிப்பாக, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன.

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்னரே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், அரசு மற்றும் மாவட்ட நிருவாகம் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஆனால், மிக அதிக அளவில் பெய்த மழையால், பல குடியிருப்புகளில் வெள்ளம் சூழ்ந்தது. இந்திய இராணுவம், கடற்படை, விமானப் படை, தேசிய பேரிடர் மீட்புக் குழு, மாநில பேரிடர் மீட்புக் குழு, காவல் துறையினர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர், இதர துறையினர் என 80 ஆயிரத்திற்கும் அதிகமானோர் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு, பாதிப்புக்குள்ளான மக்கள் மீட்கப்பட்டு, நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்குத் தேவையான உணவு, குடிநீர், மருத்துவ வசதி மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்பட்டன.

வரலாறு காணாத பெருமழை காரணமாக, மழை வெள்ளத்தால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு 4 இலட்சம் ரூபாயும், குடிசை மற்றும் நிரந்தர வீடுகளில் வசித்த வெள்ள பாதிப்புக்கு உள்ளான மக்கள், கால்நடையை இழந்து பாதிக்கப்பட்ட மக்கள், பயிரிழப்பு ஏற்பட்டு பாதிக்கப்பட்ட, பாதிப்படைந்த விவசாயிகள், பாதிக்கப்பட்ட மீனவர்கள் உட்பட பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் நிவாரண உதவித் தொகை, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவுப்படி ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

இயற்கைப் பேரழிவால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அனைத்தும் விரைவில் ஒளி மிகுந்த புதிய வாழ்வை நிர்மாணிக்கும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த இயற்கைப் பேரழிவால் உயிரிழந்த மக்களின் குடும்பங்களுக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது."

(ஆ) திரு. முப்தி முகமது சயீத், ஜம்மு—காஷ்மீர் மாநில முதலமைச்சர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. முப்தி முகமது சயீத், ஜம்மு—காஷ்மீர் மாநில முதலமைச்சர் அவர்கள் மறைவு குறித்த தீர்மானம்.